மாண்புமிகு பேரவைத் தலைவர்: உங்களுடைய கேள்வி, கைத்தறித் துறை அமைச்சருக்கு வராது. வீட்டு வசதித் துறை அமைச்சரிடத்திலே இந்தக் கேள்வியைக் கேட்க வேண்டும். இப்படிக் கட்டுகிற வீடுகளில் நெசவாளர்களுக்கு முன்னுரிமை கொடுக்கப்படுமா என்று கேட்கிற கேள்வி நீங்கள் கேட்பது. ஆனால் அவருடைய துறையிலேயிருந்து கட்டப்படுகிற வீடுகளுக்குத்தான் அவர் பதில் சொல்ல முடியும். அதனால், இதற்குத் தனிக் கேள்வி போடவும். (குறுக்கீடு) இல்லை; இல்லை. நீங்கள் கேட்கிற கேள்வி, வீட்டுவசதி வாரியத்தினால் கட்டப்படுகிற வீடுகள் இந்த நெசவாளர்களுக்கு ஒதுக்கப்படுமா என்று கேட்கிறீர்கள். அதற்குத் கைத்தறித் துறை அமைச்சர் எப்படி பதில் சொல்ல முடியும்? இந்தக் கேள்வி, இதிலே துணைக் கேள்வியாக வராது. (குறுக்கீடு) அதற்குத் தனிக் கேள்வி போடவும். தனிக் கேள்வி போட்டீர்களானால், அதற்கு வீட்டு வசதித்துறை அமைச்சர் பதில் சொல்வார்.

வினா எண் 267; திரு. செ. ஆறுமுகம், மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

267—

பாலம் அமைத்தல்.

* 3755 திரு. செ. ஆறுமுகம்:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வானூர் தொகுதியில், வானூர் வட்டத்தில் திருவக்கரைக்கும் புதுவை மாநிலம் திருக்கனூருக்கும் இடையில் உள்ள ஆற்றில் ஒரு நீண்ட பாலம் அமைத்துக் கொடுக்க அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அக்கிரமக்காரர்களின் ஆணிவேரை அடியோடு களைந்து கொண்டிருக்கிற எங்கள் காவல் தெய்வம் மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களே, தென்னாற்காடு மாவட்டம், வானூர் வட்டம், எனது வானூர் தனித் தொகுதியில், மிக மிகச் சக்திவாய்ந்த அருள்மிகு வக்கரகாளியம்மன் ஆலயத்தைக் கொண்ட, திருவக்கரை என்ற உலகப் புகழ் பெற்ற ஒரு கிராமம் உள்ளது. அதன் வழியாகத்தான், சுமார் 30 கிராமங்கள் கொண்ட கிராம மக்கள் புதுவை மாநிலத்திற்குச் செல்லவும், புதுவை மாநிலத்திலிருந்து பல லட்சக்கணக்கான மக்கள் திருவக்

1992 மார்ச் 19]

கரை ஆலயத்திற்கு வருவதுமாக உள்ளது. இதனிடையில், திருக் கனூருக்குப் பக்கத்தில் ஒரு நீண்ட சருக்கு பாலம் அமைந்துள்ளது. மழைக் காலங்களில் வெள்ளம் பெருக்கெடுத்து, வழியைத் துண்டித்து விடுவதால், பொதுமக்கள் மிகப்பெரிய பாதிப்புக் குள்ளாகி விடுகிறார்கள். எனவே, நிரந்தரமாக ஒரு பாலம் அமைத்துத்தர அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்வியிலே குறிப்பிடப்பட்டுள்ள திருவக்கரை கிராமம், சங்கராவரம் ஆற்றினுடைய வடகரையில் உள்ளது. கொடுக்கூர் கிராமமானது அந்தப் பகுதியின் தென் கரையில் உள்ளது. அந்த இரண்டையும் இணைப்பதற்கு ஏற் கெனவே தரை மட்டத்திலே ஒரு பாலம் இருக்கிறது. ஆனால், மழைக் காலங்களில், மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப் போல், போக்குவரத்தின்றி மக்கள் பாதிக்கப்படுகின்றார்கள் என்பதை இந்த அரசு நன்றாக அறியும். இருப்பினும், இந்தப் பாலத்தைக் கட்டுவதற்கு ஏறத்தாழ 40 லட்சம் ரூபாய் தேவைப் படுகிறது. இருக்கிற நிதியாதாரத்தைப் பொறுத்துதான் இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முடியும். தற்போது பரிசீலனையில் இல்லை என்று ஏற்கெனவே குறிப்பிட்டிருந்தேன். இருந்தாலும், அந்தப் பகுதி மக்களுடைய கோரிக்கை நியாயமானது என்று மாண்புமிகு டாக்டர் புரட்சித் தலைவி அவர்களுடைய அரசு கருதுகிற காரணத்தினால், வருகிற நிதியாண்டிலாவது இதைப் பரிசீலித்து, இருக்கிற நிதியாதாரங்களைப் பொறுத்து, முன்னுரிமை கொடுத்து, இந்தத் திட்டம் எடுத்துக் கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள் கிறேன்.

திரு. செ. ஆறுமுகம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை என்று நான் என் தொகுதிவாழ் மக்களிடத் திலே கூறும்போது, தொகுதி சட்டமன்ற உறுப்பினர் சதி செய்கிறார் என்ற அவலநிலைக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறேன். ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் என்னுடைய இந்த அதிமுக்கியம் வாய்ந்த பிரச்சினையைக் கருத்திற் கொண்டு, வரு கிற நிதியாண்டில் நிச்சயமாக நிறைவேற்றித் தருவாரா என் பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே குறிப்பிட்டதைப்போல, நம்முடைய இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பின்னாலே தான், இந்த நெடுஞ்சாலைத் துறைக்கே முக்கியத்துவம் வந் திருக்கிறது என்பதை நான் இங்கே குறிப்பிட்டாக வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) கேட்பாரற்றுக் கிடந்த நெடுஞ் சாலைத் துறைக்கு, இன்றைக்கு சென்ற ஆண்டைவிட ஒரு மடங்கு இந்த ஆண்டு நிதிகளை ஒதுக்கி, உடனடியாக சாலைப் பணி

களைச் செப்பனிட வேண்டுமென்று உத்தரவிட்டு, புதிய முறை களைக் கையாண்டு, 'பிளான்ட்' என்று சொல்லப்படுகிற மெஷி னரிகளை வைத்துத்தான் சாலைகளைப் போட வேண்டுமென்ற முனைப்போடு, தரத்தோடு சாலைகளெல்லாம் போடப்பட்டு வருகின்றன. பாலங்கள் கட்டுவதில் முன்னுரிமை கொடுத்து உட னடியாகத் தமிழகத்திலே இருக்கின்ற முக்கியமான இடங்களில் செய்ய வேண்டிய திட்டங்களை வகுத்திருக்கிறோம். இருந் தாலும், ஏற்கெனவே நாம் சொல்லியபடி ஒரே நேரத்தில் அத்தனை தொகுதிகளிலும் இருக்கின்ற தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அரசினுடைய நிதிப் பற்றாக்குறை இருப் பதை மாண்புமிகு உறுப்பினர் நன்கு அறிவார்கள். ஆகவே அந்தப் பகுதியினுடைய முக்கியத்துவத்தைக் கருதி, நான் ஏற் கெனவே சொன்னதுபோல் உடனடியாக அந்தத் திட்டத்தைப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க ஆவன செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

முற்பகல் 10—05

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 268. திரு. எ. ஏகாம்பர ரெட்டி. மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர்.

268—

துணை மின் நிலையம் இயங்க நடவடிக்கை.

*4302 திரு. எ. ஏகாம்பர ரெட்டி:

மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) ஏழாவது ஐந்தாண்டுத் திட்டத்தின் கீழ் திருத்தணி கோட்டம், காஞ்சீபுரம் மின்வாரிய மின்வழங்கு வட்டத்தினால் கே.ஜி. கண்டிகையில் நிறுவப்பட்டு முடிவுற்ற நிலையிலுள்ள துணை மின்நிலையம் இதுவரை இயங்காமல் இருப்பது அரசுக்கு தெரியுமா?

(ஆ) ஆம் எனில், அத்துணை மின்நிலையம் எப்போது இயங்கும்?

மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) கண்டிகை துணை மின் நிலையம் 19–10–1991 முதல் இயங்குகிறது. துணை மின் நிலையம் அமைக்கின்ற பணி முடி வுற்றது. நம்முடைய அரசு பொறுப்பு ஏற்றதற்குப் பின்னாலே தான் அந்தத் தகவல் தொடர்புத் துறையிடமிருந்து உரிமம் கிடைக்காத காரணத்தால் ஏற்பட்ட சிக்கலை நீக்கி இன்றைக்கு